சுருக்கம்

உயர்கல்வி – கல்லூரிக் கல்வி – 2017–18ஆம் கல்வியாண்டு முதல் திருவாரூர் மாவட்டம் குடவாசலில், புதிதாக துவங்கப்பட்ட அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு "டாக்டர் புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி" என பெயர் சூட்டி – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (ஜி1) துறை

அரசாணை (நிலை) எண்.271

நாள் 20.09.2017
ஹேவிளம்பி, புரட்டாசி 04
திருவள்ளுவராண்டு 2048

படிக்கப்பட்டவை:

1 அரசாணை (நிலை) எண்.199, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 24.07.2017.
2 கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.35284/க்யூ2/2017, நாள் 06.09.2017.

-----

ஆணை:-

திருவாரூர் மாவட்டத்தில் 19.08.2017 அன்று தமிழ்நாடு அரசு சார்பில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

> "குடவாசலில் புதிதாக அம்மாவின் அரசால் தொடங்கப்பட்ட கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி என்று பெயர் சூட்ட வேண்டுமென்று அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கோரிக்கை வைத்தனர். அவர்களது கோரிக்கையை ஏற்று அக்கல்லூரிக்கு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி என்று பெயர் சூட்டப்படும்"

2. மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மற்றவைகளுக்கிடையே 2017–18ஆம் கல்வியாண்டு முதல் திருவாரூர் மாவட்டம் குடவாசலில், ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியினை (1) இளங்கலை தமிழ் (B.A. Tamil), (2) இளங்கலை ஆங்கிலம் (B.A. English), (3) இளமறிவியல் கணிதம் (B.Sc. Mathematics) English Medium, (4) இளநிலை வணிகவியல் (B.Com) English Medium மற்றும் (5) இளமறிவியல் கணினி அறிவியல், (B.Sc., Computer Science) English Medium ஆகிய 5 பாடப்பிரிவுகளுடன் துவங்குவதற்கு அனுமதியும், இக்கல்லூரிக்கு 15 ஆசிரியர் மற்றும் 17 ஆசிரியரல்லா பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்தும், தொடரும் செலவினத்திற்கு ரூ.92,79,000/– மற்றும் தொடராச் செலவினத்திற்கு ரூ.31,13,000/– நிதி

ஒப்பளிப்பு செய்தும், இக்கல்லூரிக்கு நிரந்தர கட்டிடம் கட்டுவதற்கு ரூ.7.97 கோடிக்கு நிர்வாக ஒப்பளிப்பு செய்தும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. கல்லூரிக் கல்வி இயக்குநர், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் திருவாரூர் மாவட்டம், குடவாசலில் புதிதாக துவங்கப்பட்ட அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தற்காலிகமாக குடவாசல் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் இயங்கி வருகிறது என்றும் இக்கல்லூரிக்கென நிரந்தர கட்டிடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் குடவாலில் நடைபெற்று வரும் கல்லூரி முழுமையான அரசு கல்லூரியாகும் என்றும் இக்கல்லூரிக்கு "டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி" என பெயர் சூட்டலாம் எனப் பரிந்துரை செய்துள்ளார்.

4. மேற்காணும் மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பிற்கிணங்க, 2017–18ஆம் கல்வியாண்டு முதல் திருவாரூர் மாவட்டம், குடவாசலில், புதிதாக துவங்கப்பட்ட அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு "டாக்டர் புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி" என்று பெயர் சூட்டி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுனில் பாலிவால்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை–6
முதல்வர், "டாக்டர் புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி" குடவாசல், திருவாரூர். (கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக).
மாவட்ட ஆட்சியர், திருவாரூர்.
சம்பந்தப்பட்ட மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்
சம்பந்தப்பட்ட கருவூலக் கணக்கு அலுவலர்
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை–18
சார்ந்த பல்கலைக்கழக துணைவேந்தர்/பதிவாளர்.
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
உயர்கல்வித் துறையின் முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை–9.
இ.கோ. / உதிரிகள்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

அரசு சார்புச் செயலாளர்
20/9/2017